**Tiaano®** Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

### GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers…**
  - Up to May 14 : 767 Nos.
  - Up to Apr. 14 : 763 Nos.
- **Performance May 14 …**
  - Turnover growth : 1.53%
  - Employment growth : 3.16%
  - 100% Attendance : 13.92%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

### OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## ஆசை

ஒரு ஊரில் பணக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் பேராசை பிடித்தவன். மற்றவர்களிடம் இருப்பதை அபகரித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைபவன்.

அடுத்த ஊரில் ஏழை இளைஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல புத்திசாலி, சுறுசுறுப்பானவன். அந்தப் பணக்காரனைப் பற்றிக் கேள்விப்பட்ட இளைஞன், அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டும் என்று நினைத்தான்.

ஒருநாள், ஊரின் ஒதுக்குப்புறத்தில் அந்த இளைஞன் வந்து நின்றான். அப்போது நல்ல பனி வெடவெட வென்று நடுங்க வைக்கும் குளிர். இளைஞன் நின்று கொண்டிருந்த வழியாக அந்தப் பணக்காரன் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும், இளைஞன் தனது கையிலிருந்து வாத்தியக் கருவியை மீட்டத் தொடங்கினான். நிறைய கிழிசல்கள் கொண்ட சட்டையை அவன் அணிந்திருந்தான்.

ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்த இளைஞனுக்கு அருகே வந்தான், பணக்காரன். வெடவெடக்கும் குளிரில் தன்னை மறந்து இசை மீட்டிக்கொண்டிருக்கும் அவனைப் பார்க்க, பணக்காரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த கடுங்குளிரில் உன்னால் எப்படி இவ்வளவு ஆனந்தமாக இருக்க முடிகிறது? என்று கேட்டான் பணக்காரன். அதுவா? என்று அலட்சியமாகச் சிரித்தவன், நான் அணிந்திருக்கிற இந்த பொத்தல்கள் நிறைந்த சட்டைதான் காரணம்! இதன் ஒரு துவாரத்தில் உள்ளே நுழைகின்ற பனிக்காற்று மறுவினாடியே அடுத்த துவாரத்தின் வழியே வெளியேறி விடுகிறது.

அத்துடன் இந்த சட்டை எனக்கு உற்சாகத்தையும் புதுத் தெம்பையும் தருகிறது! என்றான். பணக்காரனுக்கு அந்தச் சட்டையை எப்படியும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்தது. இந்த சட்டையை எனக்குத் தந்துவிடு, நான் உனக்கு நிறையப் பணம் தருகிறேன் என்றான். இளைஞன் தனது தந்திரம் பலித்ததை எண்ணி மகிழ்ந்தான். “அதெல்லாம் முடியாது!” என்றான்.

“எனது குதிரையையும் தருகிறேன்” என்றான் பணக்காரன், ஒருவாறு இளைஞன் சம்மதித்தான். பணக்காரன் தன் கையிலிருந்த பணம் முழுவதையும் கொடுத்ததுடன், குதிரையையும் கொடுத்தான். பழைய கந்தல் சட்டையை இளைஞனிடமிருந்து வாங்கிக் கொண்டான். ஏழை இளைஞன் அங்கிருந்து புறப்பட்டுப் போனான். தான் ஏமாந்து போனதைப் பணக்காரன் நீண்ட நேரத்திற்குப் பிறகே உணர்ந்துகொண்டான்.

நண்பர்களே! ஆசைதான் எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. ஆகவே நம்முடைய வாழ்க்கையில் ஏழைகளை கொள்ளையிடாதபடிக்கு, வாழ்வின் ஒவ்வொரு படியிலும் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## FUNCTIONAL WISHES



**Kamarajar Birth Day**

**15th JULY**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mrs. S. MARAGATHAM** — **05th Jul.**
Coating

**Mr. BB. RUBEN SONAR** — **06th Jul.**
M.S.E

**Mr. M. DURAI** — **08th Jul.**
Production

**Mrs. S. B. KOHILA** — **10th Jul.**
Quality Control

**Mr. P. ARUMUGAM** — **24th Jul.**
Marketing

**Mr. R. NAGAN** — **24th Jul.**
Quality Control

**Mr. P. R. BALA KUMARESH** — **27th Jul.**
M.S.E

**Mr. M. SATHIYASEELAN** — **29th Jul.**
Purchase

**Mr. S. THARMA ARASU** — **31th Jul.**
Finance

**Best Wishes from Tiaano Employees**

### Never Forget two people in Your Life...

The person who lost everything just to make you win. [**Your Father**]

The person who was with you in every pain. [**Your Mother**]

## கான்.:.பிடன்ஸ் கார்னர்

காற்று வீசிக் கொண்டிருந்தது கிளையின் மேல் அமர்ந்திருந்த காகம், ஒன்றுமே செய்யாமல் கண்மூடி அமர்ந்து காற்றை ரசித்துக் கொண்டிருந்தது. துள்ளி வந்து முயல் கேட்டது, "நானும் உன் போல் வெறுமனே அமரலாமா?" 'அமரலாமே' என்றது காகம் கண்மூடி அமர்ந்த முயலை நரி வந்து பிடித்துக் கொண்டது. அதைத் தின்னும் முன்னர் சொன்னது, 'ஒன்றுமே சொல்லாமல் இருக்கவேண்டுமென்றால் நீ உயர்ந்த இடத்தில் இருந்தால்தான் முடியும்'.

—கான்.:.பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## உன்னை அறிந்தால்

ஒரு நாள் ஆபிசில் வேலை செய்யும் பணியாட்கள் அனைவரும் வேலைக்கு சரியான நேரத்தில் வந்து சேர்ந்தனர். நோட்டீஸ் போர்டில் ஏதோ எழுதி இருக்கிறதே என்று அனைவரும் பார்க்கச் சென்றனர். அதில் "உங்கள் வளர்ச்சிக்கும் நம் கம்பெனி வளர்ச்சிக்கும் இடையூராக இருந்த நபர் நேற்று காலமானார், அடுத்த கட்டிடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்" என்று எழுதி இருந்தது.

இதை பார்த்தவுடன் அவர்கள் எல்லாருக்கும் நம்முடன் வேலை செய்த ஒருவர் இறந்து விட்டாரே என்று வருத்தமாக இருந்தது. பிறகு நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்த நபர் யாராக இருக்கும் என்று அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது.

அனைவரும் அடுத்த கட்டிடத்திற்கு சென்றனர். சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராக செல்ல ஆரம்பித்தனர். சவப்பெட்டியை நெருங்க நெருங்க நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவன் யாராக இருக்கும். நல்ல வேளை அவன் இறந்து விட்டான் என்று நினைத்தபடியே முன்னோக்கி சென்றனர்.

சவப்பெட்டியினுள் எட்டி பார்த்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது. சவப்பெட்டிக்குள் யார் எல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது.

கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதி இருந்தது..."உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம், நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது, உங்கள் வளர்ச்சியை உங்களை தவிர வேறு யாராலும் தடுத்த நிறுத்த முடியாது" என்றிருந்தது.

உங்கள் வாழ்க்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது, உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது, நீ நினைத்தால் மட்டுமே உன் வாழ்வை மாற்ற முடியும்.

"The world is like a mirror", it gives back to anyone the reflection of the thoughts in which one has strongly believed".

ஒவ்வொருவர் முன்னேற்றத்துக்கும் அவர்கள் தன்னம்பிக்கையே காரணம்...உன்னை தவிர உன் முன்னேற்றத்தை தடுக்க யாராலும் முடியாது.

Compiled By : Mrs. K. Shreemadhi
Administration

## தெரிந்து கொள்வோம்

### A mans Best Friend



A newborn baby abandoned in a forest was saved by a stray dog who carried her across a busy road and through a barbed wire fence to a shed where the infant was discovered nestled with her litter of puppies.

**13வயதே நிரம்பிய சிறுமி எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை**

இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து 13 வயதே நிரம்பிய சிறுமியான மலாவத் பூர்ணா என்பவர் சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் மிக இளம் வயதில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண் என்ற பெருமையும் அவருக்கு கிட்டியது.

52 நாட்களாக எவரெஸ்ட் சிகரத்தை நோக்கி தனது குழுவினருடன் நடைபயணத்தை துவக்கிய அச்சிறுமி காலை 5.53 மணியளவில் இலக்கை அடைந்து சாதனை படைத்தார். இதன் மூலம் மன உறுதி உள்ள எவரும் எவரெஸ்ட் சிகரத்தை அடைய முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்ததை உணர்த்தும் வகையில் அங்கு அம்பேத்கர் படத்தை வைத்து விட்டு வந்துள்ளனர், பூர்ணாவும் அவரது நண்பரான சதனபள்ளி ஆனந்த் ஆகியோர். இதில் ஆனந்த் தலித் இனத்தை சேர்ந்தவராவார். ஆந்திராவின் நிசாமாபாத் மாவட்டத்தில் உள்ள தட்வாய் கிராமத்தை சேர்ந்த பூர்ணாவின் பெற்றோர் பண்ணையில் ஊழியர்களாக பணி செய்து வருகின்றனர்.

150க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்ட போட்டியில் இவர்கள் இருவரை தேர்வு செய்தது குறிப்பிடத்தக்கது.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

### A Scorpion

An old man saw a scorpion drowning and decided to pull it out from the water. He calmly extended his hand to reach the creature. When he did, the scorpion stung him. With the effect of the pain, the old man let to go the creature and it fell back into the water. The man realizing that the scorpion was drowning again, got back and tried to rescue it but then again it stung him. He let go of it again.

A young boy standing by, approached the old man and said, "Excuse me Sir, you are going to hurt yourself trying to save the evil – vicious creature, why do you insist? Don't you realize that each time you try to help the scorpion, it stings you? "The man replied, "the nature of the scorpion is to sting and mine is to help. It will not change in helping the scorpion". So the man thought for a while and used a leaf from a nearby tree and pulled the scorpion out from the water and saved it's life.

Do not change your nature. If someone hurts you, just take precautions. Some pursue happiness while others create it. Let your conscience be your guide in whatever you do.

Collected from Internet

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி XXX)

**ஜிட்**

காரணம், எந்த பணியிடமும் சரியாக ஒழுங்குபடுத்தப்படும் வரை, அங்கே எத்தனை சதுர அடி காலியிடம் இருக்கிறது என்பது கூட யாருக்கும் தெரியாது. தினந்தோறும் அங்கேயே வேலை செய்கிறவர்கள்கூட, இட நெருக்கடி என்று குற்றம் சாட்டுகிறவர்களேதவிர, அதற்கான காரணம் அவசியமற்ற பொருள்களைச் சேமித்து வைப்பதுதான் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்காது.

இதனால் தொழிற்சாலை முழுவதிலும், அவசியமற்ற, தேவையில்லாத பொருள்களையெல்லாம் கண்டறிந்து நீக்குவதைத் தனி நடவடிக்கையாகவே செய்வார்கள். அதன் முடிவில் குறைந்த பட்சம் இருபது முதல் ஐம்பது சதவிகிதம்வரை இடம் மிச்சப்படும். அப்போதுதான், நிஜமாகவே நாம் இந்த தொழிற்சாலையை விரிவுபடுத்தவேண்டுமா என்கிற முடிவு எடுக்கப்படும்.

தொழிற்சாலைகளில் மட்டுமின்றி நமது வீடுகளிலும், அவசியமில்லாத, அடிக்கடி பயன்படுத்தாத பொருள்களைப் பரவலாகக் குவித்து வைத்திருக்கிறோம். அவற்றைக் கண்டறிந்து, உரிய இடங்களுக்கு மாற்றினால் அல்லது அகற்றினால், நிறைய இடம் மிச்சப்படும்.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக இடம் மிச்சப்படுத்துவதில் என்ன பெரிய பலன் கிடைத்துவிடும் என்று யோசிக்கிறவர்கள் ஜிட் – **JIT (Just In Time)** என்கிற உற்பத்தியில் உத்தியைக் கவனிக்கவேண்டும்.

Contd....4

## கவிதைகள்

### நம்பிக்கை

கரைகளே...
நெருப்பாய் இருந்தால்
நதிக்கொன்றும்
நஷ்டம் இல்லை...
நண்பர் உனக்கு
நம்பிக்கை இருந்தால்
தடைகளொன்றும்
கஷ்டம் இல்லை.

Compiled By : Miss. P. Nirmala Devi
Finance

### Life is

An opportunity, benefit from it,
Life is a beauty, admire it,
Life is a dream, realize it,
Life is a challenge, meet it,
Life is a duty, complete it,
Life is a game, play it,
Life is a promise, fulfill it,
Life is sorrow, overcome it,
Life is a song, sing it,
Life is a struggle, accept it,
Life is a tragedy, confront it,
Life is an adventure, dare it,
Life is luck, make it,
Life is life, Fight for it!

Compiled By : Miss. T. Regi
Facilitation

## சிந்தனைக்கு

உலகத்தில் மிகவும் மலிவான பொருள் அன்புதான் அதை வாங்குகிறவனுக்கும் விற்கிறவனுக்கும் பன்மடங்கு லாபத்தை தரும்!!

**உத்வேகமளிக்கும் மந்திரம்**

வெள்ளம் பாய்ந்து வரும் பொழுது நாம் நிமிர்ந்து நின்று எதிர்ப்பது விவேகமல்ல வளைந்து கொடுப்போம் என்றால் மிதந்து செல்லலாம்.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் டும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

பெரும்பாலான தொழிற்சாலைகளில், கோடௌன்(**Godown**) அல்லது வேர்ஹவுஸ்(**Warehouse**) என்ற பெயரில் சேமிப்புகிடங்குக்காக ஏகப்பட்ட இடத்தை ஒதுக்கிவைத்திருப்பார்கள். இங்கே, சில குறிப்பிட்ட வகைப் பொருள்கள்தான் சேமித்து வைக்கப்படும்.

1. உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள்/கச்சாப்பொருள்கள் (**Raw Materials**).
2. பாதி வேலை முடிந்த பொருள்கள் (**Work In Progress**).
3. இயந்திரங்களுக்குத் தேவையான உதிரி பாகங்கள் (**Spare Parts**).
4. மற்றவை (நட், போல்ட், ஸ்பேனர் இன்னபிற).

இவை எல்லாமே, ஒரு தொழிற்சாலையின் தொடர்ந்த இயக்கத்துக்கும் உற்பத்திக்கும் மிக அவசியமானவை, இதனால்தான் உற்பத்தி நடைபெறும் பகுதியிலேயோ, அல்லது சற்று அருகிலோ இந்த கோடௌன்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

எந்த தொழிற்சாலையாலும் தவிர்க்கமுடியாத இந்தச் சேமிப்புகிடங்குகளால், சில தொல்லைகளும் உண்டு.

முதலாவதாக, அத்தனை பெரிய இடத்தை வெறுமனே சேமிப்புக்காக முடங்குவதால், இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் இயக்கத்துக்குக் கிடைக்கிற இடப்பகுதி (**Floor Space**) குறைந்துபோகிறது.

அடுத்து இந்த கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் விலை உண்டு. அவற்றை ஏகப்பட்ட காசு கொடுத்து வாங்கி, சும்மா அடுக்கிவைத்திருப்பதில் என்ன பிரயோஜனம்.?

உதாரணமாக, ஒரு சேமிப்பு கிடங்கில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள மூலப்பொருள்கள் இருப்பதாக வைத்துக்கொண்டால், அந்த பொருள்கள் நிஜமாகவே பயனுக்கு வரும் வரை, தினந்தோறும் இந்தத் தொகைக்கான வட்டி வீண் தானே? அந்த காசு நம் கையில் இருந்தால் வேறு பயனுள்ள வகைகளில் உபயோகப்படுத்தலாமே!

தொடரும்...

### ISMF CYLINDRICAL STRUCTURE ASSEMBLY(Titanium)

